# டாக்டர் வா.செ.கு. கல்வி மற்றும் ஆய்வு அறக்கட்டளை

# பத்தாம் ஆண்டு விழா, 20.07.2008

## பாராட்டு உரை, டாக்டர் வா.செ. குழந்தைசாமி

நான் எனது முதல் உரையிலேயே இந்த நிகழ்ச்சி பற்றிச் சில வார்த்தைகள் கூறினேன். கடந்த 10 ஆண்டுகளாக இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடந்து வருகிறது. 10 ஆண்டுகட்கு முன்பு நான் தமிழக அரசின் திருவள்ளுவர் விருது பெற்ற பொழுது, அதுவரை எப்பொழுதும் எந்தப் பாராட்டையும் ஏற்காது இருந்த எனக்கு, பெரிய அளவில் பாராட்டு விழா நடந்த வேண்டும் என்று நண்பர் திரு. பெரியதம்பி ஒரு நீண்ட கடிதம் எழுதினார். அவர் படித்துப் பட்டம் பெற்றவர் அல்ல ஆனால் அவர் எழுதிய அந்தக் கடிதம் ஒரு தலை சிறந்த இலக்கியம். பல்கலைக்கழகப் பட்டம் பெற்ற பலராலும் அப்படி ஒரு கடிதத்தை எழுதியிருக்க முடியாது. அந்தக் கடிதத்தை மதிக்க வேண்டிய பொறுப்பு எனக்கு இருந்தது. எனவே நான் என்னைப் பாராட்டுவதற்காக விழா எடுத்து, வீண் செலவு செய்ய வேண்டாம். அந்தப் பணத்தை வைத்து ஒரு அறக்கட்டளை நிறுவுங்கள். அதன் மூலம் இயன்ற அளவில் கல்விப் பணி செய்ய முயலுங்கள். நான் பங்கேற்கிறேன் என்று கூறினேன். அதனடிப்படையில் அமைந்ததுதான் இந்த அறக்கட்டளை. நிதி வசதி என்ற அளவில் இது ஓர் எளிய நிறுவனம், மிக எளிய நிறுவனம். ஆனால் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டது. அந்த நோக்கத்தை உயர்த்திப்பிடிக்கும் சில அறங்காவலர்களைக் கொண்டது. அந்த அறங்காவலர்கள் தங்களை முன்னிலைப் படுத்தாதவர்கள்; தங்கட்கு விளம்பரம் தேடாதவர்கள்.

இந்த அறக்கட்டளை ஏற்படுவதற்கு ஆரம்ப காலத்தில் காரணக் கர்த்தாவாக இருந்தவர் திரு. பெரியதம்பி என்று கூறினேன். அது தொடர்ந்து நடப்பதிலும் பெரிய அளவில் பங்கேற்று வருபவர். ஆனால் கடந்த 10 ஆண்டுகளில் அவருடைய பெயரை நான் அழைப்பிதழில் பார்த்ததில்லை. அவர் ஒரு முறையாவது மேடையில் ஒலி பெருக்கியின் முன் வந்து பேசியதில்லை.

இன்று நாம் இந்த நாட்டில் காணும் அவலங்கள் அனைத்தினிடையே, ஊழல்கள் அனைத்தினிடையே, விளம்பரம் விரும்பிகளின் இடையே தங்களை முன்னிலைப்படுத்தும் தலைவர்களிடையே, இந்த நாடு வாழ்கிறது, வளர்கிறது, முன்னேறுகிறது என்றால் இந்த நாட்டில் இன்னும் திரு. பெரியதம்பி போன்ற சிலர் இருக்கிறார்கள் என்பதால் தான். எனது

இந்தக் கருத்தை அவரோடு சேர்ந்து பணிபுரியும் அரங்காவல்கள் அனைவரும் தவறாது ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

நாம் வாழும் இந்தக்கால கட்டத்தைக் கல்வியுகம் என்று கூறுகிறோம். அது எந்த அளவுக்குக் கடந்த காலத்தில் உண்மையோ நான் அறியேன். ஆனால் இன்று உண்மை, மலேசியா பெரிய அளவில் உலகப் பல்கலைக்கழகங்களோடு தொடர்பு கொண்டு கல்வியை விரிவாக்கியது, பெருக்கியது. அண்மையில் ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த யுனிடோ நிறுவனம் செய்த ஆய்வின்படி தொழில் துறை போட்டியில் 100 நாடுகளில் இந்தியா 41 – ஆவது இடத்தில் இருக்கிறது. ஆனால் மலேசியா 18–ஆவது இடத்தில் இருக்கிறது. இந்தியாவோடு பொருளாதார வளர்ச்சியில் கால் நூற்றாண்டுக்கு முன்பு ஒப்பிடத்தக்க நிலையில் இருந்த சைனா இன்று வளர்ந்த நாடுகளோடு ஒப்பிடும் அளவுக்கு முன்னேறிவிட்டது. அதன் முன்னேற்றத்திற்கு அதன் கல்வி நிலையும் ஒரு முக்கியமான காரணம்.

மாசேதுங் கொண்டு வந்த பண்பாட்டு புரட்சிக் காலத்தைத் தாண்டி 1979–இல் சீனா தனது முன்னேற்றப் பயணத்தை மேற்கொண்டது. அப்பொழுது சைனாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 70 சதவிகிதம். ஆனால் 1981–இல் இந்தியாவில் எழுதபடிக்க தெரிந்தவர்கள் 41.6 சதவிகிதம் தான். பாதிக்கு மேற்பட்டவர்கள் தற்குறி, இளைய தலைமுறையினரை எடுத்துக் கொண்டால் 1982–இல் பெண்களில் 15 முதல் 19 வயதினர் 85 சதவிகிதம் படித்தவர்கள். அதே வயதில் ஆண்கள் 96 சதவிகிதம் படித்தவர்கள். இந்தியாவை எடுத்துக் கொண்டால் 1991–இல் கூட 15 முதல் 19 வயது பெண்களில் 50 சதவிகிதத்திற்கு மேல் தற்குறிகள். ஆண்களில் 25 சதவிகிதம் பேர் தற்குறிகள். 2001–இல் கூட இந்தியாவில் 30 கோடிக்கும் அதிகமானவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்.

உலக வங்கி ஆய்வு:

i. 1960 முதல் 1975 வரையிலான காலப் பகுதியில், உலகின் மொத்தப் பொருள் உற்பத்தி [GNP] இரட்டித்தது. இந்த வளர்ச்சியின் பயன் எல்லா நாடுகட்கும் சமமாகச் செல்லவில்லை. ஏறத்தாழ 90 சதவிகிதம் போல, எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் இருந்த நாடுகட்குத்தான் இந்த வளர்ச்சியின் பெரும் பகுதி சென்றது.

ii. 1965–இல் ஆரம்பக் கல்வி வளர்ச்சிகும் மொத்தப் பொருள் உற்பத்திக்கும் [GNP] இருக்கும் தொடர்பு பற்றி, வளம் மிக்க 34 நாடுகளை எடுத்துக்

கொண்டு ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வுக்கு 1850 முதல் 1960 வரையிலான 110 ஆண்டுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. விதி விலக்கின்றி மேலே குறிப்பிட்ட நாடுகள் ஒவ்வொன்றிலும் எல்லோரும் ஆரம்பக் கல்வி பெற்ற நிலையை அடையுமுன் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட வில்லை.

iii. 1960–களில் சிங்கப்பூர், கொரியா போன்று இந்தியாவொடு ஒப்பிடத்தக்க பொருளாதார நிலையிலிருந்த நாடுகள் கடந்த 30 ஆண்டுகளில் பிரமிக்கத்தக்க வளர்ச்சி கண்டிருக்கின்றன. முன்னேறிய நாடுகளின் பட்டியல் இடம் பெறும் தகுதியை எட்டியிருக்கின்றன. ஆனால் அவை 1965–லேயே ஏறத்தாழ எல்லோரும் ஆரம்பக் கல்வி பெற்ற நிலையை எட்டி இருந்தன. இந்தியாவின் எழுத்தறிவுச் சதவிகிதம் 1961–இல் 28.3 தான். அங்கு வளர்ச்சிக்கான அடித்தளம் எழுப்பப்பட்டிருந்தது. இங்கு அது இடம் பெறவில்லை. எனவே நாம் மேலே கூறிய நாடுகள் போன்று வேகமான வளர்ச்சியை அடைய இயலவில்லை.

பாரதி:

இன்ன றும்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள்யாவும்
பெயர்விளங்கி ஒளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவும் அற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினைநல்கீர்
மதுரத் தேமொழி மாதர்கள் எல்லாம்

வாணி பூசைக்கு உரியன பேசீர்!

எதுவும் நல்கிஇங்கு எவ்வகை யானும்

இப்பெ ருந்தொழில் நாட்டுதும் வாரீர்

நமது நாட்டின் வேலை செய்யும் பருவத்தில் இருக்கும் ஆண்கள், பெண்கள் எடுத்துக் கொண்டால் அவர்களில் நூற்றுக்கு 9 பேர் அமைப்புச் சார்ந்த இடங்களில் பணிபுரிகிறார்கள். நூற்றுக்கு 90 பேர் அமைப்புச் சாராத தொழில்களில் பணிபுரிகிறார்கள். இவ்வாறு பணிபுரிபவர்களில் 100 பேருக்கு 5 பேர் தான் தாங்கள் செய்யும் பணிக்குப் பயிற்சி பெற்றவர்கள். மற்றவர்கள் எந்தப் பயிற்சியும் இல்லாது. அவரவர்களாகக் கற்றுத் தங்களுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

டிரைவர், தச்சர், கொல்லர், ஓயர் மென், மெக்கானிக் போன்ற தொழில்களுக்கு பயிற்சி கொடுப்பதற்காக இந்தியாவில் இருக்கும் நிறுவனங்கள் பத்தாயிரத்தைத் தாண்டாது. ஆனால் பட்டப்படிப்புக்கு 20000 கல்லூரிகள் இருக்கின்றன. இப்படிப்பட்ட தொழில்களுக்கு பயிற்சி கொடுக்கும் நிறுவனங்கள் சீனாவில் ஐந்து இலட்சத்திற்கு மேல் இருப்பதாகக் கூறப்படுகிறது. முதலாவதாக நாம் கைத்தொழில் போன்ற சிறு தொழில்களில் ஈடுப்பட்டிருப்பவர்களுடைய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதற்கு எண்ணற்ற பயிற்சி நிறுவனங்கள் தேவை Industrial Training Institute, Industrial Training School போன்ற நிறுவனங்கள் ஏராளமாகத் தேவை.

இந்திய மக்கள் தொகையை எடுத்துக் கொண்டால் இந்தியாவை உலகினர் இன்று இளையஞர்கள் நாடு என்று கூறுகிறார்கள். இன்று இந்தியாவில் 50 சதவிதிம் மக்கள் 25 வயதுக்குக் குறைந்தவர்கள். 31 சதவிகிதம் மக்கள் 16 வயதுக்குக் குறைந்தவர்கள். நான் முதலில் சொன்ன 50 சதவிகிதத்தினருக்கு இப்பொழுதே வேலை வாய்ப்பு வேண்டும். 50 சதவிகித்தில் பெரும்பாலும் வேலை வாய்ப்புக்குப் பயிற்சி பெற வேண்டும். இரண்டாவது சொன்ன 31 சதவிகிதத்தினரில் இருந்து பயிற்சி தேவையானவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக கியூ வரிசையில் நிற்பார்கள். இவர்கட்கெல்லாம் பயிற்சி கொடுக்கும் அளவுக்குப் பயிற்சி நிறுவனங்களை உருவாக்கினால் தான் இந்தியா தனது வறுமையிலிருந்து மீள முடியும். எனவே இன்று இந்த நாட்டின் தேசபக்தர்கள் என்பவர்கள் எளியவர்கள் எளி போருடைய கல்விக்கு வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுப்பவர்கள் தான். நமது கல்வித் தேவையை அரசினால் நிறைவேற்ற முடியாது. பெரிய அளவில் தனியார் துறையினர் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடுபவர்களை அது ஊக்குவிக்க வேண்டும்.

இன்று கலை, அறிவியல் கல்வி ஆகட்டும், தொழில் கல்வி ஆகட்டும் மிகப் பெரிய அளவில் தனியார் தான். நமது தேவையை நிறைவேற்றுகிறார்கள். தமிழகத்தை எடுத்துக் கொண்டால் கலை அறிவியல் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால் நவம்பர் 2007 கணக்குப்படி அரசு கல்லூரிகள் 60, உதவி பெறும் கல்லூரிகள்133, தனியார் கல்லூரிகள் 300. ஏறத்தாழ 60 சதவிகிதம் தனியார் கல்லூரிகள் தான். பொறியியல் கல்லூரிகளை எடுத்துக் கொண்டால் 2007–08 – இல் 285 கல்லூரிகளில் அரசு கல்லூரிகள் அரசு உதவி பெறும் கல்லூரிகள் 15 தான். மற்றபடி 270 கல்லூரிகள் தனியார் துறையைச் சேர்ந்தவர்கள். இப்பொழுது தனியார் கல்லூரிகள் இன்னும் அதிகம். செவிலியர் பயிற்சி கல்லூரியை எடுத்துக் கொண்டால் 38 கல்லூரிகளில் 37 தனியார் துறையில் இருக்கின்றன. பிசியோதரபி தனியார் துறையில் 43 கல்லூரிகளில், 41 தனியார் துறையைச் சேர்ந்தது (95.3),

மருந்தியியல் துறையில் 34 கல்லூரிகளில், 32 தனியார் துறையில் (96.11) இருக்கின்றன. இன்று MBA படிப்பு எல்லோராலும் விரும்பப்படுகிறது. MBA கல்வி எடுத்துக் கொண்டால் 149 கல்லூரிகளில் 135 தனியார் கல்லூரி (90.7 சதவிகிதம்). ITI போன்ற தொழிற் பயிற்சி நிறுவனங்கள் எடுத்துக் கொண்டால் கூட 682 நிறுவனங்களில் 615 தனியார் துறையில். அதாவது 91.5 சதவிகிதம்.

இது தமிழ்நாட்டின் நிலை என்பது மட்டுமல்ல. இந்தியா முழுவதிலும் நிலைமை இதுதான். இந்த அளவிற்குக் கல்லூரிகள் பெருகியும் நமது தேவையைப் பூர்த்தி செய்ய இயலவில்லை. உயர் கல்வி பெறும் வயது வந்த 100 இளைஞர்களில் 10 பேர்தான் உயர்கல்வி பெறுகிறார்கள். 90 பேருக்கு அந்த வாய்ப்பில்லை. இந்தப் பத்துப் பேரிலும் தங்கட்கு வேண்டிய வசதி இந்தியாவில் இல்லை என்பதற்காக இந்திய மாணவர்கள் வெளிநாடு செய்கிறார்கள். அமெரிக்காவில் படிக்கும் மாணவர்கள் ஏறத்தாழ 85000. இவர்கட்கு நம் நாட்டிலிருந்து செலவுக்கு அனுப்பப்படும் பணம் 12000 கோடி,

இந்தியாவிலிருந்து பிரிட்டனில் படிக்கும் மாணவர்கள் 14250 (2003–2004), ஆஸ்திரேலியாவில் படிக்கும் மாணவர்கள் 21000 (2003–2004). இப்பொழுது இந்த எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம்.

எனவே இந்த நாட்டின் கல்வி தேவையைப் பூர்த்தி செய்யும் பணியில் தனியார் துறைக்கு முக்கியமான பணி உண்டு. கரூர் மாவட்டத்தைப் பொருத்தவரை

தனிப்பட்டவர்கள் இந்தத்தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் பெரிய அளவில் ஈடுபாடு காட்ட வேண்டும்.

பெரும் தொழில்களில் மட்டுமல் நான் முன்பு கூறியது போலக் கைத்தொழில் போன்றவற்றிலும் பயிற்சி பெற்றவர்கட்கு ஏராளமான வாய்ப்புக் காத்திருக்கிறது. வைரம் சாணை பிடிக்கும் தொழில் கேள்விப்பட்டிருப்பீர்கள். பெல்ஜியத்தில் இருந்து அந்தத் தொழில் செய்பவர்கள் தங்களுடைய தொழில் சாலைகளை இந்தியாவிற்கு மாற்றியிருக்கிறார்கள். அதன் மூலம் புதிதாக ஐந்து இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாகியிருக்கின்றன. நமது வேளாண்மை தொழிலில் அளவு கடந்த வாய்ப்புகள் எதிர்காலத்தில் இருக்கின்றன. குளிர்சாதன வசதிகள் இல்லாதாதால் முறையான பாதுகாப்பு வாய்ப்புகள் இல்லாததால் நாம் உற்பத்தி செய்யும் பழங்கள் காய்கறிகளில் **40** சதவிகிதம் வீணாவதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

நாம் வாழ்வது கணிப்பொறி யுகம். இன்று வேகம்தான் வெற்றியின் சின்னம். **18–**ஆவது நூற்றாண்டில் இங்கிலாந்தில் தொழிற் புரட்சி ஏற்பட்டது. **1780–இல்** தொடங்கி அந்த நாட்டின் GDP அதாவது மொத்த உற்பத்தி இரட்டிப்பிற்கு **58** ஆண்டுகளாகின. அடுத்து அமெரிக்காவில் உற்பத்தி இரட்டிப்பிற்கு. **1839–**இல் தொடங்கி **47** ஆண்டுகளாயின. ஜப்பானுக்கு **1865–இல் தொடங்கி 34 ஆண்டுகள் ஆயிற்று. ஆனால் 1966–இல் தொடங்கிய, தென் கொரியா 11 ஆண்டுகளில் தனது மொத்த உற்பத்தியை இரண்டு மடங்கு ஆக்கியது.** **1978**–இல் தொடங்கிய சீனா தென் கொரியாவையும் மிஞ்சி **9** ஆண்டுகளில் உற்பத்தியை இரட்டிப்பு ஆக்கியது. எனவே உலகம் அசாதராணமான வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. நமது நாட்டைப் பொருத்தவரை எதற்கெடுத்தாலும் நாம் வாதம் செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏதாவது ஒரு எதிர்ப்பு வந்து கொண்டே இருக்கிறது. சில சமயங்களில் எதிர்க்காட்சிகள் எதிர்க்கின்றன. இன்னும் சில சமயங்களில் கூட்டணியில் இருக்கும் கட்சிகளே எதிர்க்கின்றன. காலையில் இருந்து மாலை வரை நாம் செய்தித் தாளைப் புரட்டினால் ஒவ்வொருக் கட்சி தலைவரும் ஏதாவது ஒரு காரணத்திற்கு ஆர்ப்பாட்டம் செய்வதற்கே அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நாட்டில் கடமையைச் செய்வதும் கட்டுபாடும் முக்கியமான இடத்தைப் பெற வேண்டும். நமது நாட்டைப்பொருத்தவரை தவறு செய்பவர்கள் மீது வழக்குப் போடுகிறார்கள். அது தவறாது நடக்கிறது. லஞ்ச ஒழிப்பைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் அரசியல்வாதிகளைப் பொருத்தவரை, அதிகாரிகளைப்

பொருத்தவரை யாரும் தண்டிக்கப்படும் செய்தியே அவ்வளவாக நாம் பார்க்க இயலவில்லை. சீனா ஒரு பொதுவுடைமை நாடு, பொதுவாக அங்கு லஞ்ச ஊழல் இருக்கக் கூடாது. **ஆனால் 2006–ஆவது ஆண்டில் மட்டும் லஞ்ச ஊழலுக்காக 97260 பேர் பொதுவுடைமை கட்சியால் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.** நம்மைப்பொருத்தவரைக் கடவுள் தூணிலும் இருக்கிறார், துரும்பிலும் இருக்கிறார் என்கிறார்கள். அவர் இல்லாத இடமே இல்லை அது சரியோ, தவறோ நான் அறியேன். ஆனால் லஞ்சமில்லாத இடமே இல்லை, இருந்தாலும் யாரும் தண்டிக்கப்படுவதில்லை. ஏன்எனில் எல்லோருமே குற்றவாளிகளாக இருந்தால் யாரை யார் தண்டிப்பது. சிறந்த குடிமக்களாகக் கடமை உணர்வு உள்ளவர்களாக ஒரு சமுதாயம் உருவாக வேண்டுமானால் மக்களிடையே விழிப்புணர்வு வேண்டும்.

ஏழையர்கள் எதை நம்ப? எவர்பின் செல்ல?
ஏர் பிடித்து விதைத்தறுத்த கதிர்கள் யாவும்
பாழையெனின் பாடுதரும் பவன்தான் என்ன?
பகுத்தறிவே, விழிப்புணர்வே சமுதா யத்தின்

நந்தாத தீப்பந்தம்; வய்ய வாழ்வின்
நங்கூரம்; பேரிடியம் புயலும் சேர்ந்து
வந்தாலும் திசைகாட்டும் காந்தம்; நாளும்
மானிடத்தை வழிநடத்தி வளர்க்கும் சக்தி.

கல்வி ஒன்றே கரை சேர்க்கும். ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்குவதற்கான பயிற்சி பள்ளிகளில் தான் தொடங்க வேண்டும்.

அதற்கான பயிற்சி பள்ளிகளில் தான் தொடங்க வேண்டும். எனவே நாம் இன்று பாராட்டும் மாணவர்களின் கல்வி, பொருளாதார அளவில் மட்டும் முக்கியமானது அல்ல. சமுதாய அளவில் அதைவிட முக்கியமானது.

சென்ற ஆண்டு பேசும் பொழுது கீழ்க்கண்ட தகவல்களைக் கொடுத்தேன். கரூரில் நகராண்மைக் கழகம் தொடக்க கல்விக்காக மக்களிடமிருந்து வசூலித்த தொகை பின் வருமாறு:

2003–04 – இல் – 34.7 இலட்சம்
2004–05 – இல் – 38.48 இலட்சம்
2005–06 – இல் – 38.16 இலட்சம்

2006 வரை முன்பு வசூலித்து செலவிடப்பட்டத் தொகை 330.9 இலட்சம்

சென்ற ஆண்டு நான் பேசும் பொழுது ரூ.63 இலட்சத்திற்கு கட்டட வேலைகள் எடுக்கப்பட பேவதாக தெரிவித்தார்கள். அவ்வளவு பணமும் செலவிடப்படாது வங்கியில் இருப்பதாக தெரிகிறது. நகராட்சியின் கீழ் இருப்பவை நான்கு ஆரம்ப பள்ளிகளும், ஐந்து நடுநிலைப் பள்ளிகளும் தான். நகராட்சி வசூலிக்கும் பணத்தை ஒழுங்காக செலவு செய்தால் நகராட்சி பள்ளிகள் கான்வென்ட் பள்ளிகளை விட சிறப்பாக இருக்கலாம். நகராட்சி ஆனையர், நகராட்சி உறுப்பினர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் இதை ஆய்ந்து பார்க்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.